அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய எண்ணமிருக்கிறது. ஆனால் இதுவரையிலிருந்த வாடகையினால் ஏராளமான நஷ்டம் வந்திருக்கிறது. சுற்றுலா வாரியம் வியாபார வாரியம். ஆகவே லாபகரமாக நடத்த வேண்டும். அப்படி நடத்துவதற்காகத்தான் 50 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

ஜவ்வாது மலையில் வனவிலங்குகள் உய்விடம்

** 397 வினா.*—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலையில் விலங்குகள் அதிகமாக வசிக்கும் பகுதியை வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்பொழுது வேடந்தாங்கலில் பறவைகள் சரணாலயம் இருக்கிறது. ஆனால் ஜவ்வாது மலையில் வன விலங்குகள் நிறைய ஏற்படும் சூழ்நிலை நன்றாக இருக்கிறது. எனவே இப்பொழுது அங்கே வனவிலங்குகள் அதிகமாக இல்லாவிட்டாலும் வெளியிலேயிருந்து அஸ்ஸாம் போன்ற இடங்களிலிருந்து கொண்டுவந்து வனவிலங்குகளைப் பாதுகாக்கப் அரசு இனியாவது முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் சந்தவாசல் சரகத்தில் மான் பூங்கா அமைக்க திட்டமிருக்கிறது.

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கல்

** 398 வினா.*—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

1972 மார்ச் 9]

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, பேருந்துகளுக்கு ஒரு உச்சவரம்பை நிர்ணயித்து அரசுடைமையாக்கியது நாட்டு மக்களிடத்தில் நல்ல வரவேற்பைக் கொடுத்திருக்கிறது. அதைப்போல் முதல் கட்டமாக இந்த லாரிகளுக்கும் ஐம்பதோ அல்லது அதற்கு மேற்கொண்டோயிருக்கும் கம்பெனிகளை அரசுடைமையாக்கும் உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது கொள்கைப் பிரச்சினை.

திரு. என். கணபதி : துணைத் தலைவரவர்களே, இருக்கின்ற லாரி கம்பெனிகளை தேசிய மயமாக்குவது என்பதை ஒரு பிரச்சினையாகப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். சிவில் சப்ளை டிபார்ட்மெண்டில் நிறைய லாரிகளை வைத்துக்கொண்டு, அதைப் போலீஸ் டிபார்ட்மெண்டு, ஃபயர் சர்வீஸ் போன்றவைகளுக்குக் கொடுத்து பயனற்றதாக்கியிருக்கிறார்கள். அந்த லாரிகளை வைத்து ஒரு தேசிய லாரி கம்பெனி ஆரம்பிக்க நம் அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவர்கள் குறிப்பிடுகின்ற லாரிகள் உணவு வருவாய்த்துறை அமைச்சரிடத்தில் இருக்கின்றன. ஆகவே அவற்றைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, லாரிகளைத் தேசியமயமாக்கக்கூடிய திட்டம் இப்பொழுது இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இண்டர் ஸ்டேட் பர்மிட்டோடு மற்ற மாநிலங்களுக்கு நீண்ட தூரம் போகக்கூடிய லாரிகள் இருக்கும். அவைகளை யாவது அரசாங்கம் ஏற்குமா ? அதோடு லாரிகளுக்குக் கட்டண விகிதாச்சாரம் இதுவரையில் இல்லை. பஸ்ஸில் ஒரு பாசஞ்சருக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 3 காசு என்று இருக்கிறது. ஆனால் லாரிகளில் அவர்கள் கண்டபடி அந்தக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அதையாவது ஒரு டன்னுக்கு ஒரு மைலுக்கு இவ்வளவுதான் வாங்க வேண்டுமென்று அரசாங்கம் சட்டத்தைக் கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்பொழுது தமிழ்நாட்டிலே ஓடும் லாரிகளானாலும் சரி, வெளி மாநிலங்களுக்கு ஓடுகின்ற லாரிகளானாலும் சரி அவற்றை நாட்டுடைமையாக்குகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்தினிடத்தில் இல்லை.

அதேபோல் லாரிகளுக்குக் கட்டண விகிதம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். பஸ்களிலே அது சுலபம். ஏனென்றால் பிரயாணத்தை மனிதர்கள்தான் செய்கிறார்கள். ஆனால் லாரிகளிலே பல்வேறு வகையான சாமான்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. சில சாமான்களுக்கு அதிக கட்டணம் கொடுப்பார்கள். சிலவற்றிற்கு, தாதுப் பொருள்கள் போன்றவைகளுக்கு அதிகக் கட்டணம் தரமாட்டார்கள். இதுபோன்ற பல சிக்கல்கள் இருப்பதால், அதுற்றி நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. முனு. அதி. தலைவரவர்களே, பேருந்துகளில் நமக்கும் நஷ்டம் ஏற்படுகின்ற அறிகுறி தென்படுகின்ற காரணத்தினால், இரயில்களிலும் பிரயாணிகள் வண்டிகளினால் நஷ்டமும், குட்ஸ்களினால் லாபமும் வருகின்ற காரணத்தினால், அங்கேயும் குட்ஸ்களுக்கு முதல் மதிப்பைத் தருகிறார்கள். ஆகவே, இங்கேயும் லாரிகளைத் தேசீய மயமாக்குவதைத் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டம் பூராவும் சாமான்களை எடுத்துச் செல்லும் லாரிகளைத் தேசீய மயமாக்கினால் அதிக லாபம் வரும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிச் செய்கின்ற எண்ணம் ஏதாவது அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே லாரிகளைத் தேசீய மயமாக்கும் உத்தேசம் இல்லை என்று சொன்னேன். ஆனால் அவர்கள் பயணிகள் போக்குவரத்திலே நஷ்டம்தான் வருகிறது என்று சொன்னார்கள். அதிலே படிப்படியாக முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது லாரிகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் இப்பொழுது இல்லை என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலேயிருக்கும் அத்தனை லாரிகளையும் இப்பொழுது நாட்டுடைமையாக்குவதற்கு முயற்சிக்கவில்லை என்றாலும், டி.வி.எஸ்., ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ் என்பவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அந்த பார்சல் சர்வீஸ்களை உடனடியாக நாட்டுடைமையாக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இன்னும் பஸ்களையே நாம் முழுவதும் தேசீயமயம் ஆக்காத நிலையிலே லாரிகளைப்பற்றி இப்பொழுது சிந்திப்பதே தேவையில்லை.

1972 மார்ச் 9]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, லாரிகளை நாட்டுடமையாக்கும் திட்டம் தற்போது இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாட்டு மக்களின் பாதுகாப்புக்கும், உடைமைக்குப் பாதுகாப்பும் இருக்கின்ற வகையிலே லாரிகளில் மீட்டர்களைப் பொருத்துவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் வேகமானிகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அவைகளில் ஒழுங்காக வேகமானிகளைப் பராமரித்துக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி போக்குவரத்துத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, லாரிகளை நாட்டுடமையாக்கும் திட்டம் இப்பொழுது இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். கொள்கை அளவிலாவது நாட்டுடமையாக்கும் முறையில் லாரிகளை நாட்டுடமையாக்கும் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரங்களில் கொள்கைப் பிரச்சினைகளைச் சொல்வதற்கில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இரவு நேரங்களில் லாரிகள் வேகமாக ஓட்டப்படுவதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் இரவு நேரங்களில் லாரிகளை ஓட்டாமலிருக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

Food carrying baskets in State Transport buses in Madras

* 399 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state whether food-carrying baskets are being permitted to be carried in Government buses in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது சென்னை மாநகரப் பேருந்துகளை இயக்கி வருகிற பல்லவா போக்குவரத்துக் கழகம், சாப்பாட்டுக் கூடைகளைப் பேருந்துகளில் கட்டணமின்றி எடுத்துச் செல்ல தொடர்ந்து அனுமதித்து வருகிறது.